2023 ஏப்ரல் 19]

கேள்வியாகவும் அமைந்திருக்கிறது. போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கிறது. எனவே, இவர் கேள்வி கேட்டதையே மையப்படுத்தி, நான்குவழிச் சாலை ஆக்குவதுதான் சாலச் சிறந்தது என்ற அடிப்படையிலே ஒன்றிய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுத, இந்த அரசு முன்முயற்சி எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 183, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி, மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

183—

வேளாண்மைக் கல்லூரி

***54734—திரு. அ. பண்ணாரி:**

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *பவானிசாகர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *பவானிசாகர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி அவர்கள்.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். எங்கள் பொதுச் செயலாளர் அவர்களை வணங்குகிறேன். பவானிசாகர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கத் தேவையான 500 ஏக்கர் நிலம் உள்ளது. மேலும், பல்வேறு பயிர்கள் பயிர் செய்ய ஏற்ற மண் வளமும், நீர் வளமும், இயற்கை வளமும் உள்ளது. ஆகவே,*

மாணவ, மாணவியர்களின் நலன் கருதி, அந்தப் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதியைச் சுற்றியுள்ள கோவை, கரூர், நாமக்கல், திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் 12 அரசுக் கல்லூரிகள் இருக்கின்றன; தனியார் கல்லூரிகள் 4 இருக்கின்றன; ஆராய்ச்சி நிலையங்கள் 5 இருக்கின்றன; KVK வேளாண் அறிவியல் நிலையங்கள் 4 இருக்கின்றன; மொத்தம் 25 கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இன்னும் சொல்லப் போனால், இந்த 12 அரசுக் கல்லூரிகளில் 1,547 இடங்கள் உள்ளன. ஆனால், இந்த ஆண்டு 1,261 மாணவர்கள்தான் சேர்ந்திருக்கின்றார்கள். 286 இடங்கள் காலியாக உள்ளன. ஆக, அந்தளவுக்கு அந்தப் பகுதியைச் சுற்றி கல்லூரிகள் இருக்கின்ற காரணத்தால், தற்போது இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி அவர்கள்.

திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். பவானிசாகர் தொகுதியின் பெரும்பகுதி மலைப் பகுதி ஆகும். இங்குள்ள மக்கள் பெரும்பாலும் மக்காச்சோளத்தைப் பயிர் செய்து வருகிறார்கள். ஆனால், மக்காச்சோளத்திற்குத் தகுந்த விலையில்லாததால் இடைத்தரகர்கள் மற்றும் வியாபாரிகள் பயனடைந்து வருகிறார்கள். ஆகவே, விவசாயிகள் நலன் கருதி, மக்காச்சோளத்திற்கு அரசே விலை நிர்ணயம் செய்து, அதைக் கொள்முதல் செய்ய முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்லூரி கேட்டார்கள்; இப்போது மக்காச்சோளத்தைக் கொள்முதல் செய்யக் கேட்கிறார்கள்; மக்காச்சோளத்தைக் கொள்முதல் செய்வதற்கு நாங்கள் அனுமதியளித்து, இப்போது அதைக் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறோம். அதைத் தனியார் அதிகமாக கொள்முதல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக, விலை நிர்ணயத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய கையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

184—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***38109—திரு. A.P. நந்தகுமார்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதியில் தற்பொழுது வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லாத காரணத்தால் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டுவதற்கான வாய்ப்பு தற்பொழுது இல்லை.